2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்வது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி.சி. சந்திரகுமார், திரு. எஸ்.ஆர். பார்த்திபன், (குறுக்கீடு) என்ன சொல்லுங்கள்? (குறுக்கீடு) Zero hour—ல்தான் எடுத்துக்கொள்கிறேன். பிறகு என்ன? (குறுக்கீடு) இன்றைக்கு மூன்று கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) என்ன? (குறுக்கீடு) இல்லை, அதையெல்லாம் நான் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) பிறகு பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, இன்று பார்க்கலாம் உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்குக் கவன ஈர்ப்பு எடுத்ததுபோக நேரம் இருக்கும்போது எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு)பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய பிரச்சினை குறித்து முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறோம். அதை அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன? சொல்லுங்கள் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுடைய பிரச்சினை, அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தம் சம்பந்தமான பிரச்சினை ஆகியவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன? சொல்லுங்கள். ஒரே கட்சியைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடு) ஒவ்வொரு உறுப்பினராக எழுந்து கேட்டால் ஏதாவது சொல்லலாம். (குறுக்கீடு) திரு. அ. சவுந்தரராசன், நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே, பிறகு என்ன? (குறுக்கீடு) நீங்கள்தான் சொல்விட்டீர்களே? சரி, சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன்.*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடனான ஊதிய ஒப்பந்தம் 15 மாதங்களாக நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் கூட்டுப் போராட்டக் குழுமூலம் வேலைநிறுத்த அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். தமிழகத்தில் அது கடுமையான பதற்ற நிலையை உண்டாக்கியிருக்கின்றது. கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய பணம் தரப்படாததால், அந்த விவசாயிகள் கடுமையாக. . .*

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் வந்தால் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். திரு. சு. குணசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சியில்தான் ஏற்கெனவே திரு. எம். ஆறுமுகம் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதே சப்ஜெக்ட்தான். உட்காருங்கள். ஏற்கெனவே அவர் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டார். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

2014 டிசம்பர் 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சினை. இப்படிச் சொன்னால் ஒவ்வொரு கட்சியிலும் 10 பேர் இருக்கிறீர்கள். 10 பேருக்கும் நான் வாய்ப்புத் தர முடியுமா? 10 பேர் இருக்கிறீர்கள். 8 பேர் இருக்கிறீர்கள். 8 பேருக்கும் நான் வாய்ப்புத் தர முடியுமா? (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் சொல்லுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் கடந்த 6 மாதங்களில் 71 படுகொலைகள் நடந்திருக்கின்றன. அதுகுறித்து தங்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. என்.ஆர். ரெங்கராஜன், நீங்கள் சொல்லுங்கள்.*

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்டா மாவட்டத்தில் பயிர்ப் பாதுகாப்பு இன்சூரன்ஸ் கொடுப்பதற்கான தேதியை நீட்டிக்க வேண்டுமென்று விவசாயிகள் கேட்டிருக்கிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், நீங்கள் சொல்லுங்கள்.*

**திரு. எல். வெங்கடேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்குத் தனியார் சர்க்கரை ஆலைகள் கொடுக்க வேண்டிய டன்னுக்கு 300 ரூபாய் பணத்தைக் கொடுக்காமல் தொடர்ந்து புறக்கணித்து வருகிறார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போகிறேன். நீங்கள் உட்காருங்கள்.*

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்த அலுவலாக தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்முதல் செய்வது குறித்து தே.மு.தி.க. உறுப்பினர்கள் திருவாளர்கள் வி.சி. சந்திரகுமார், எஸ். ஆர். பார்த்திபன், தி.மு.க. உறுப்பினர்கள் திருவாளர்கள்*